පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் |
| --- |
| 10 |

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

பாடசாலையின் பெயர் : ..............................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ..........................................................

...........................................................................................                நேரம் : 03 மணித்தியாலம்

Education NCP - www.edncp.lk

## தகவல் தொழிநுட்பம்
## பகுதி I

பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

1. அடிப்படை விளக்கத்தைத் தரும் எவ்வகையிலும் முறைவழிப்படுத்தப்படாத எழுத்துக்கள் ,எண்கள் ,படங்கள்,ஒலிகள் ஆகியவற்றை கொண்ட தொகுதி எவ்வாறு அழைக்கப்படும்.?
   i) தகவல்  iii) முறைமை
   ii) தரவு  iv) இணையம்

2. தரவிலிருந்து தகவலிற்கான பின்வரும் மாற்றீட்டினை கருதுக.
   தரவு ⟶ X ⟶ தகவல்
   X இனை பிரதியீடு செய்வதற்கு மிகப் பொருத்தமானது பின்வருவனவற்றுள் எது?
   i) காட்சிப்படுத்தல்  iii) வடிவமைத்தல்
   ii) முறைவழிப்படுத்தல்  iv) பரீட்சித்தல்

3. பகுப்பாய்வுப் பொறியினை உருவாக்கியவர் யார்?
   i) அடா ஒகஸ்ரா லவ்லேஸ்  iii) பிளேஸ் பஸ்கால்
   ii) ஜோன் நேபியர்  iv) சார்ள்ஸ் பபேஜ்

4. அரசாங்கம் அரசியலமைப்புத் தகவல்களை தனது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில்காட்சிப்படுத்தியுள்ளது. இச் செயற்பாடு மின் அரசாங்கத்தின் எவ் வகையினைச் சாரும்?
   i) G2G  iii) G2C
   ii) G2B  iv) G2E

5. தன்னியக்க தொடரிக் கட்டுபாட்டுக் கணிப்பான் எனும் உபகரணம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
   i) ENIAC  iii) UNVAC
   ii) EDVAC  iv) MARK1

6. முதலாவது கணினிச் செய்நிரலாளராக கருதப்படுபவர் யார்?
   i) சார்ள்ஸ் பபேஜ்  iii) பில் கேட்ஸ்
   ii) அடா ஒகஸ்ரா லவ்லேஸ்  iv) ஜோன் வொன் நியூமன்

7. பின்வருவனவற்றுள் எது கணினி முறைவழியாக்கித் தொழினுட்பவியலின் பரிணாம வளர்ச்சியின் சரியான வரிசையைக் காட்டுகின்றது?
   i) வெற்றிடக்குழாய்கள், திரான்ஸ்சிற்றர்கள், ஒன்றினைந்த சுற்றுக்கள், மைய முறைவழியாக்கிகள்
   ii) திரான்ஸ்சிற்றர்கள், வெற்றிடக்குழாய்கள், மைய முறைவழியாக்கிகள், ஒன்றினைந்த சுற்றுக்கள்
   iii) திரான்ஸ்சிற்றர்கள், மைய முறைவழியாக்கிகள், ஒன்றினைந்த சுற்றுக்கள், வெற்றிடக்குழாய்கள்
   iv) மைய முறைவழியாக்கிகள், திரான்ஸ்சிற்றர்கள், ஒன்றினைந்த சுற்றுக்கள், வெற்றிடக்குழாய்கள்

8. வரைபியல் பயனர் இடைமுகத்தை கொண்ட பணிசெயல் முறைமை பயன்படுத்தப்பட்ட கணினித் தலைமுறை பின்வருவனவற்றுள் எது?
   i) முதலாம் தலைமுறைக் கணினி
   ii) இரண்டாம் தலைமுறைக் கணினி
   iii) மூன்றாம் தலைமுறைக் கணினி
   iv) நான்காம் தலைமுறைக் கணினி

9. இலங்கை அரசாங்கத்தின் இணையத்தளத்தின் முகவரி யாது?
   i) www.srilanka.com
   ii) www.government.lk
   iii) www.srilanka.lk
   iv) www.gov.lk

10. இதயத்திலிருந்து உடலின் அங்கங்களுக்கு குருதியை வழங்கும் போது இதயத்தில் உண்டாகும் துடிப்பை அவதானிப்பதற்கு பயன்படுத்தப்படும் வருடி யாது?
   i) CAT scanner
   ii) MRI scanner
   iii) ECG
   iv) EEG

11. தொழிலாளர்களின் வரவைப் பதிவுசெய்வதற்கு இன்று நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் நவீன முறை யாது?
   i) கையொப்பமிடுதல் (Signature)
   ii) பட்டைக்குறிமுறை வாசிப்பான் (Bar code reader)
   iii) அடையாள அலகிடலி (Finger Print scanner)
   iv) காந்தமைவரியுரு வாசிப்பான் (MICR)

12. இலக்கமுறைக் கணினிக்கும், கலப்பினக் கணினிக்குமான உதாரணங்கள் எவை?
   i) வானிலை அளவைப் பொறிகள், மடிக்கணினிகள்
   ii) தனியாள் கணினிகள், மடிக்கணினிகள்
   iii) மடிக்கணினிகள், EGG இயந்திரம்
   iv) வானிலை அளவைப் பொறிகள், EGG இயந்திரம்


13. அருகில் காட்டப்பட்டுள்ள படம் எதனைக் குறிக்கின்றது?
   i) Bar code
   ii) QR code
   iii) OMR code
   iv) OCR code

உரு1.1

14. கணினியின் கதியினை அளக்கப் பயன்படும் அலகு யாது?
   i) $ms^{-1}$
   ii) GHz
   iii) $Mbs^{-1}$
   iv) $Kmh^{-1}$

15. பின்வருவனவற்றுள் அழிதகு நினைவகத்திற்கு உதாரணமாக அமைவது எது?
   i) வன் வட்டு
   ii) நெகிழ் வட்டு
   iii) புளூ-றே
   iv) பதுக்கு நினைவம்

16. உருவில் காட்டப்பட்டுள்ள தகவல் தொடர்பாடல் ஊடகம் எது?
   i) பரிசையிடாத முறுக்கிய சோடி
   ii) பரிசையிட்ட முறுக்கிய கம்பிச் சோடி
   iii) ஓரச்சுவடம்
   iv) ஒளியியல் நார்கள்


உரு1.2

17. தன்னியக்க காசளிப்பு பொறியில் (ATM) சீட்டுக்களை (Receipt) வழங்க பயன்படுத்தப்படும் அச்சுப் பொறி எது?
   i) வரைவி
   ii) வரி அச்சுப் பொறி
   iii) வெப்ப அச்சுப் பொறி
   iv) புள்ளி அமைவுரு அச்சுப் பொறி

Education NCP - www.edncp.lk

18. கதோட் கதிர் குழாய்(CRT) காட்சித் திரையை விட திரவப்பளிங்கு காட்சித் திரையைப்(LCD) பயன்படுத்துவதால் கிடைக்கும் அனுகூலம் பின்வருவனவற்றுள் எது?
   i) ஒப்பீட்டளவில் செலவு குறைவு, அத்துடன் தெளிவான காட்சிகளையும் பெற முடியும்.
   ii) குறைந்தளவு மின்சாரத்தை நுகர்வதுடன் குறைந்த இடப்பிரமாணத்தை எடுக்கின்றது.
   iii) விம்பங்கள் மீளப்புதுப்பிக்கப்பட அதிக நேரம் எடுப்பதுடன் விலையும் குறைவானது.
   iv) திரையின் மாற்றல் விகிதம் குறைவாகவும் அதிக வெப்பமும் வெளிவிடப்படும்.

19. வலையமைப்பு இடைமுக அட்டையில் (Network Interface card ) வடங்களை (Cables) இணைப்பதற்கு பயன்படுத்தப்படும் துறை (Port) எவ் வகையை சார்ந்தது?
   i) RJ 45
   ii) RJ 11
   iii) USB
   iv) Serial

20. USB இன் விரிவாக்கம் யாது?
   i) Uninstall Subsequence Bus
   ii) Universal Serial Bus
   iii) Universal System Bandwidth
   iv) Universal System Bus

21. பின்வருவனவற்றைக் கருதுக:
   A – வோக்கி ரோக்கி  B- வானொலி  C – தொலைபேசி  D – ஆளி
   மேற்க்குறித்த உபகரணங்களில் முழு இருவழிப்போக்கு முறைக்கு உதாரணமாக அமைவது/அமைபவை எது/எவை?
   i) A மாத்திரம்
   ii) C மாத்திரம்
   iii) C,D மாத்திரம்
   iv) A,B,C,D ஆகிய எல்லாம்

22. பின்வரும் சாதனங்களை கருதுக:
   A – OCR  B- இயக்குப்பிடி  C – தொடுநிரப்பிடம்
   மேற்குறித்தவற்றில் சுட்டும் சாதனம்/சாதனங்கள் எது/எவை?
   i) B மாத்திரம்
   ii) A,B மாத்திரம்
   iii) B,C மாத்திரம்
   iv) A,C மாத்திரம்

23. குருநாகல் நகரில் உள்ள XYZ வங்கி ஒன்றின் அனைத்து வங்கிக் கிளைகளையும் இணைப்பதற்கு பயன்படுத்தக்கூடிய பொருத்தமான கணினி வலையமைப்பு எது?
   i) பெருநகர்ப் பரப்பு வலையமைப்பு
   ii) இடத்துரிப் பரப்பு வலையமைப்பு
   iii) பெரும் பரப்பு வலையமைப்பு
   iv) இணையம்

24. $110101_2$ என்ற எண்ணின் தசமப் பெறுமானம் யாது?
   i) 35
   ii) 57
   iii) 53
   iv) 54

25. 73 என்ற தசம எண்ணிற்குரிய எண்மப் பெறுமானம் யாது?
   i) $111_8$
   ii) $101_8$
   iii) $113_8$
   iv) $211_8$

26. 37 எனும் தசமப் பெறுமானத்தின் BCD பெறுமானமானது?
   i) 00110111
   ii) 01110011
   iii) 11100111
   iv) 00110011

Education NCP - www.edncp.lk

27. பின்வருவனவற்றில் எது துணைத் தேக்கச் சாதனங்களில் கொள்ளளவை (Capacities) ஏறு வரிசையில் காட்டுகின்றது?

i) காந்தநாடா, வன்வட்டு, சிமிட்டும் நினைவகம், பதிவகம்
ii) பதிவகம், சிமிட்டும் நினைவகம், வன்வட்டு, காந்தநாடா
iii) பதிவகம், சிமிட்டும் நினைவகம், காந்தநாடா, வன்வட்டு
iv) காந்தநாடா, பதிவகம், சிமிட்டும் நினைவகம், வன்வட்டு

28. பின்வருவனவற்றில் அதி குறைந்த பெறுமானம் யாது?

i) $235_{10}$
ii) $1110101_2$
iii) $302_8$
iv) $1A1_{16}$

29. A என்ற எழுத்திற்குரிய ASCII பெறுமானம் $65_{10}$ எனில் D என்ற எழுத்திற்குரிய இருமப் பெறுமானம் யாது?

i) 1000100
ii) 1000011
iii) 1010011
iv) 1000101

30. 0.0345 என்னும் எண்ணின் மிகக் குறைந்த பொருளுடைய இலக்கத்தையும் (LSD) அதிகூடிய பொருளுடைய இலக்கத்தையும் (MSD) குறிப்பது?

i) 0, 5
ii) 3, 5
iii) 0, 0
iv) 5, 3

31. ஒரு பேனையின் விலையினதும் ஒரு பென்சிலினது விலையினதும் ரூபா20.00. பேனையினதும் பென்சிலினதும் விலைகள் துவித எண்ணில் முறையே

i) $1110_2$ மற்றும் $101_2$
ii) $1101_2$ மற்றும் $110_2$
iii) $1101_2$ மற்றும் $111_2$
iv) $1011_2$ மற்றும் $111_2$

32. கீழ் வரும் சாதனங்களை கருதுக.

A – இறுவட்டு B- இலக்கமுறை பல்திவாற்றல் வட்டு C – வன்வட்டு D – பளீச்சீட்டு நினைவகம்

மேற்க் குறித்தவற்றில் திண்ம நிலைத் தேக்கச் சாதனம்/சாதனங்கள் எது/எவை?

i) A,B மட்டும்
ii) C,D மட்டும்
iii) C மட்டும்
iv) D மட்டும்

33. 8KB இற்கு சமவலுவற்றது பின்வருவனவற்றில் எது?

i) 8 x 1024 bytes
ii) $2^{17}$ bits
iii) $2^3 \times 2^{10}$MB
iv) $2^{13}$bytes

34. CD என்பதன் விரிவாக்கம் யாது?


i) Computer Disc
ii) Compact Disc
iii) Compact Drive
iv) 2,3 சரியானவை

35. Unicode குறியீட்டு முறைமையில் வகைக்குறிக்கப்படும் பிற்றுக்களின் (Bit) எண்ணிக்கை யாது?

i) 7 பிற்று
ii) 4 பிற்று
iii) 16 பிற்று
iv) 8 பிற்று

36. அருகில் காட்டப்பட்டுள்ள படத்திற்கு பொருத்தமான வலையமைப்பு யாது?

i) பாட்டை வலையமைப்பு
ii) விண்மீன் வலையமைப்பு
iii) வளையம் வலையமைப்பு
iv) கண்ணி வலையமைப்பு



உரு1.3

Education NCP - www.ednc p.lk

37. மேசைக் கணினி எவ்வகை கணினியாகும்
    i) சிறு கணினி
    ii) நுண் கணினி
    iii) மீக் கணினி
    iv) பெருமுகக் கணினிகள்

38. பின்வருவனவற்றில் முதன்மை நினைவகமாகக் கருதக்கூடியது எது?
    i) தற்போக்குப் பெறுவழி நினைவகம்
    ii) இறுவட்டு
    iii) இலக்கப் பல்விதத் தட்டுக்கள் வட்டு
    iv) வன்வட்டு

39. பின்வரும் நுட்ப முறைகளைக் கருதுக.
    A கணினி உதவியுடனான கற்றல்.
    B அடிப்படையிலான கற்றல்.
    C கணினி அடிப்படையிலான கணிப்பீடு.

    மேற்குறித்த நுட்பங்களுள் எது/எவை தகவல் தொழினுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல்-கற்பித்தல் முறையாகும்?
    i) A மாத்திரம்
    ii) B மாத்திரம்
    iii) A,C மாத்திரம்
    iv) A,B,C எல்லாம்

40. பின்வருவனவற்றில் எது மிகவும் வேகம் கூடிய தரவு தொடர்பாடல் ஊடகமாகும்?
    i) பரிசையிடாத முறுக்கிய சோடி
    ii) பரிசையிட்ட முறுக்கிய கம்பிச் சோடி
    iii) ஓரச்சுவடம்
    iv) ஒளியியல் நார்கள்

(01x40=20 புள்ளி)

Education NCP - www.edncp.lk

## தகவல் தொழிநுட்பம்
## பகுதி II

**கவனத்திற் கொள்ளவும்.**

- **முதலாம் வினாவுக்கும் ஏனைய நான்கு வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**
- **முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்**

**01.**

**i.** "தகவல்கள் பயனுள்ளவைகளாக அமைவது மிக முக்கியமானதாகும்" தகவலொன்றில் இருக்கக்கூடிய இரண்டு பண்புகளைக் குறிப்பிடுக.

**ii.** பின்வரும் அட்டவணையில் A,B க்கான இரண்டு பிரயோசனங்களையும் அவை ஒவ்வொன்றுக்குமுரிய உதாரணத்தையும் தருக.

| பிரயோசனம் | உதாரணம் |
|---|---|
| உதா:- சுகாதாரத் துறை | வைத்திய பரிசோதனைக்கு பயன்படுத்தல் |
| A ............................. | X ....................................... |
| B ............................. | Y ...................................... |

**iii.** கணினியின் இயங்கு நிலை பற்றிய விவணம் கீழே தரப்பட்டுள்ளது.

உள்ளீட்டு கருவியூடாக உள்ளீடு செய்யப்படும் i. ............................... மற்றும் ii. ....................... முதலில் பயணிப்பது iii. .................................. ஆகும். அதன் பின் தரவுகளை ஒழுங்கு படுத்துவதற்காக வேண்டி iv. ........................................ செல்லும் v. ........................... ..................ஊடாக தயார்படுத்தப்படும் தரவுகளும் கட்டளைகளும் vi. ........................... ஆக மீண்டும் முதன்மை நினைவகத்திற்கு அனுப்பப்படும்.

மேற்காட்டிய I,ii,iii,iv,v,vi, ஆகிய இடைவெளிகளுக்கு கீழுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| மைய முறை வழியாக்க அலகு, | தகவல் , | கட்டளை, | தரவு, |
| முதன்மை நினைவகம், | எண்கணிதமும் தருக்க அலகும் | | |

**iv.** துணைத் தேக்கச் சாதனங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவற்றுக்கான உதாரணங்களைத் தருக.

| சாதான வகை | உதாரணம் |
|---|---|
| காந்த ஊடகச் சாதனம் | X ..................................................... |
| ஒளியியல் ஊடகம் | Y ..................................................... |
| திண்ம நிலைச்சாதனங்கள் | Z ..................................................... |

**v.** **$AD8_{18}$** என்பதை அடி எட்டுக்கு பரிமாற்றம் செய்க. செய்கை வழியைக் காட்டுக.

Education NCP - www.edncp.lk

vi. கணினிகளை வலையமைப்பாக்கும் போது பயன்படுத்தப்படும் இரண்டு உபகரணங்களைத் தருக.

vii. அச்சிடலுக்காக புள்ளி அமைவுரு அச்சுப் பொறிக்குப் பதிலாக லேசர் அச்சுப் பொறி பயன்படுத்துவதன் இரண்டு நன்மைகளைத் தருக.

viii. அருகில் காணப்படும் தரக்கப்படலையின் வருவிளைவைத் தருக.

ix. A,B,C,D ஆகிய துறைகளை இனங்கண்டு பொருத்தமான துறைகளைக் குறிப்பிடுக.

x. அட்டவணைணை நிரப்புவதற்கு கீழ் காணப்படும் சொற்களைக் கருதுக.

| பிரயோக மென்பொருள் | பணிச்செயன்மறைமை | பயன்பாட்டு மென்பொருள் |
|---|---|---|
| | | |
| | | |

Education NCP - www.edncp.lk

**02.** அன்றாட வாழ்க்கையில் தகவல் பரிமாற்றத்திற்கு பல்வேறு தகவல் பரிமாற்ற ஊடகங்கள் பயன்படுத்தப்படும்.

i. தரவு ஊடுகடத்தலுக்கு இருக்க வேண்டிய பிரதானமானவைகள் யாவை?

ii. கீழ் காணப்படும் உபகரணங்களில் பயன்படுத்தப்படும் தகவல் ஊடுகடத்தல் முறைகள் யாவை?
   **a.** தொலைபேசி
   **b.** தொலைக்காட்சி
   **c.** வோகி டோகி இயந்திரம்

iii. **A)** தரவு ஊடுகடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் பிரதான 2 ஊடக முறைகளைத் தருக.
   **B)** இரண்டு நாடுகளுக்கிடையே தரவு ஊடுகடத்த பொறுத்தமான ஊடகம் யாது?

iv. இணையத் தொடர்பை ஏற்படுத்தும் **Modem** மூலம் செயற்படுத்தபபடும் பிரதான 2 செயற்பாடுகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்கவும்.

**03. Creative Studio** எனும் பெயரில் புகைப்படமெடுக்கும் சிறிய வியாபாரமொன்றில் ரவி ஈடுபட்டிருக்கின்றான். இந்நிலையத்தில் உருவில் காட்டபட்டது போன்று சிறய கணினி வலையமைப்பொன்றை ஏற்படுத்தியுள்ளன். அவன் A எனும் பெயரில் உள்ள உபகரணத்தை B எனும் உபகரணத்துடன் இணைக்க C எனும் வடத்தைப் பயன்படுத்துகிறான்.

i. **A** யினால் காட்டப்பட்ட உபகரணம் யாது?

ii. ரவி பயன்படுத்தும் வலையமைப்பு வகை யாது?

iii. **B** எனும் உபகரணம் யாது?

iv. கணினி வலையமைப்பின் இரண்டு நன்மைகளைத் தருக?

v. வலையமைப்பிற்குப் பயன்படுத்தப்படுகின்ற வழிப்படுத்தப்பட்ட ஊடகம், வழிப்படுத்தபபடாத ஊடகம் என்பவற்றை உதாரணத்துடன் விளக்குக.

**04. A)** வினித் தனது நண்பனின் காரியாலயத்தில் காணப்படும் கணினியைப் பயன்படுத்தி கடிதமொன்றை உருவாக்க எண்ணுகிறான். அங்கு அக்கணினியில் இணைய வசதி காணப்படுவதோடு சொல்முறை வழிப்படுத்தி மென்பொருளொன்று காணப்படாமையை உணருகிறான்

**i.** கடிதத்தை உருவாக்க வினித்துக்குத் தேவையான மென்பொருளொன்றைத் தருக.

**ii.** அவன் உருவாக்கிய கடிதத்தின் வன்நகலொன்றை பெறக் கூடிய படி முறைகளைத் தருக.

**iii.** வினித் தான் உருவாக்கிய கோவை GOOGLE DRIVE இல் சேமிக்கின்றான். அவனுக்கு அதனை ரெப்லட் கணினியைப் பயன்படுத்தி வாசிக்க அதனுள் அவனுக்கு தேவையான மென்பொருள் யாது?

**B)** கீதாவிற்கு ICT பாடத்திற்கான ஒப்படையொன்று கிடைத்தது. அது நிரல்களையும் நிரைகளையும் கொண்டிருந்தது.

| பெயர் | பாடம் | | |
|---|---|---|---|
| | தமிழ் | கணிதம் | விஞ்ஞானம் |
| ரவி | | | |
| சுனில் | | | |
| சுசீலா | | | |
| வத்சலா | | | |
| நிர்மாணி | | | |

**i.** கணிதத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் இடையில் புதிதாக ஆங்கில நிரலொன்றை உட்படுத்துவதற்கான படிமுறைகளைத் தருக.

**ii.** தமிழ் பாடத்திற்கான நிரலை நீக்குவதற்கான படிமுறைகளைத் தருக.

**iii.** பாடங்களின் பெயர் குறிப்பிடப்பட்ட நிரைக்கு மேலே "மாணவர் புள்ளி" என ஒரு நிரையை உருவாக்க வேண்டியுள்ளது. அது ஒரு தனிச் சிற்றறையாகக் (Cell) காட்டும் படிமுறையைத் தருக.

**05.** ஆரம்ப காலத்தில் கணினியில் தரவுகளை பிரதிநிதித்துவப் படுத்த BCD குறிமுறை பயன்படுத்தப்பட்டது. கணினி உற்பத்தித் தொழிநுட்பம் வளர்ச்சியடைந்த போது BCD குறிமுறையானது மற்றுமொரு குறிமுறைக்கு மாற்றப்பட்டது.

**i.** BCD குறிமுறையில் வகைக் குறிக்கக்கூடிய பிற்றுக்களின் எண்ணிக்கை யாது?

**ii.** கீழ் காணப்படும் பதின்ம எண்களை BCD குறிமுறையில் தருக.

**A.** 3
**B.** 5
**C.** 9

Education NCP - www.edncp.lk

iii. நிமலனுக்கு தனது பாடசாலையில் இருக்கும் வலையமைப்புக் கணினிகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளக்கூடிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வலையமைப்பானது தினமும் இணையத்துடன் இணைந்திருக்கும். இக்கணினிகளில் நச்சு நிரலெதிர்ப்பு மென்பொருட்கள் இடப்பட்டிருந்தாலும் அது போதுமான பாதுகாப்பில்லை என்பது நிமலனின் கருத்தாகும்.

1. இணையத்துடன் இணையும்போது இக்கணினி கட்மைப்பின் பாதுகாப்பிற்கு நச்சு நிரலெதிர்ப்பு மென்பொருளைத் தவிர வேறு பாதுகாப்பு முறைகளைக் குறிப்பிடுக.

2. மேற் காட்டிய பாதுகாப்பு முறையை எவ்வகைக்குள் அடக்கலாம்?

3. வலையமைப்பிற்கு பாதுகாப்பு வழங்குவதோடு அதனூடே வழங்கப்படும் மற்றுமொரு சேவையைக் குறிப்பிடுக.

**06.** இங்கு காட்டப்படுவது வலய தகவல் தொழிநுட்ப கற்றல் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட க.பொ.த(சா/த) மாணவர்களுக்காக நடாத்தப்படவிருக்கின்ற கருத்தரங்கு சம்பந்தமாக அதிபருக்கு அறியத்தரும் கடிதமாகும்.

Computer Resource Center,
Vavuniya Road,
Kebithigollewa,
15th September 2016

The Principal,
Sri Sobitha Maha Vidyalaya,
Kadawathgama.

***Seminar on ICT for grade 11 students***

We are pleased inform you that we have organized a seminar for the grade 11 students on the 25th September 2016 at 8.30 a.m to 5.00 p.m at the the computer resource center, Kebithigollewa for following topics.

- Computer Hardware
- Electronic Presentations
- Word Processing
- Electronic Spreadsheet
- Database

If you are you interested in attending the above seminar please be kind enough to inform us on or before 25th September 2016
Thank you.
Center Manager.

i. மேற்காட்டிய கடிதத்தை தயார் செய்யும் போது பயன்படுத்தப்பட்ட நேர்படுத்தல; (Alignments) இரண்டு தருக.

ii. கடித தலைப்பின் வடிவமைப்புக்காக (Format) பயன்படுத்தப்பட்ட கருவியை (Tool) பெயரிடுக.

iii. இக்கடிதத்தில் 'October' எனும் சொல்லுக்குப்பதிலாக 'September' எனும் சொல்லை இடுவதற்கு பயன்படுத்த வேண்டிய கருவி யாது?

iv. இக்கடிதத்தை எல்லா பாடசாலைகளுக்கும் முகவரி மாற்றம் செய்து அச்சடித்து அனுப்பவதாயின் சொல்முறை வழிப்படுத்தி மென்பொருளில் காணப்படும் கருவி யாது?

v. கடிதமொன்றில் சரிபிழை பார்க்கும் போது சொற்களுக்குக் கீழ் சிவப்பு நிற கோடொன்று தோன்றுவதை அவதானிக்கலாம். இதனை நீக்கிக் கொள்ள சொல்முறை வழிப்படுத்தி மென்பொருளில் காணப்படுகின்ற கருவி யாது?

**07.** தரம் 10ல் கல்வி கற்கின்ற மாணவனாகி அகிலன் சாதாரணமாக கடையில் பொருட்களை வாங்குவதை விட இணையமூடாக பொருட்களை வாங்குவதில் அதிக நன்மை இருப்பதாக எண்ணுகின்றான்.

i. இக்கூற்றுக்கு நீங்கள் உடன்படுகின்றீரா? உங்கள் விடைக்கான காரணத்தைத் தருக?

ii. நடைமுறையில் சமூக வலைத்தளப் பாவனை மிகவும் பிரபல்யமடைந்துள்ளது. நீங்கள் அறிந்த இரண்டு சமூக வலைத்தளங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

iii. ஈ-அரசாங்கதினூடாக வர்த்தகத்துறைக்கு கிடைக்கும் இரண்டு சேவைகளைக் குறிப்பிடுக.

iv. இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் மேம்பாட்டிற்காக வேண்டி செயற்படும் ஒரு அரச நிறுவனத்தைக் குறிப்பிடுக.

Education NCP - www.edncp.lk

மாகாணக்கல்வித் திணைக்களம் வடமத்திய மாகாணம்

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

தரம்-10

தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்

## பகுதி – 1

| | | | |
|---|---|---|---|
| 01) 2 | 11) 3 | 21) 3 | 31) 3 |
| 02) 2 | 12) 3 | 22) 3 | 32) 4 |
| 03) 4 | 13) 2 | 23) 1 | 33) 3,2 |
| 04) 3 | 14) 2 | 24) 3 | 34) 2 |
| 05) 4 | 15) 4 | 25) 1 | 35) 3 |
| 06) 2 | 16) 4 | 26) 1 | 36) 2 |
| 07) 1 | 17) 3 | 27) 2 | 37) 2 |
| 08) 4 | 18) 2 | 28) 2 | 38) 1 |
| 09) 4 | 19) 1 | 29) 1 | 39) 4 |
| 10) 3 | 20) 2 | 30) 4 | 40) 4 |

## பகுதி – II

01. I.

- நோக்கதிற்கு பொருந்தக்கூடியதாகவும் செம்மையாகவும் போதியதாக இருத்தல்.
- பயனருக்கு தெளிவான விளக்கமும் நம்பகமும் கொண்டதாக இருத்தல்.
- திட்டமான பெறுமானத்தை கொண்டிருத்தல்.

II.

- பொருத்தமான விடைக்கு புள்ளிகள் வழங்கவும்

III. I. தரவு II. கட்டளை III. முதன்மை நினைவகம் IV. மைய முறைவழி அலகு

V. எண்கணித தர்க்க அலகு VI. தகவலாக

IV. X- Hard Disk , Floppy Disk, Magnetic Tape

Y- CD,DVD, Blu Ray

Z- USB Flash Drive, Memory Card

V. $AD8_{16}$

1010 1101 1000

101 011 011 000

5 3 3 0

$5330_8$

VI.

- மொடெம்
- வலையமைப்பு குவியம்
- வலையமைப்பு ஆளி
- வலையமைப்பு இடைமுக அட்டை
- சேவையகக் கணனி

VII. தெளிவானது, தரமான உருக்களை அச்சிடலாம்,Color Print,Speed

VIII.

IX.

02. I. Sender/source, Medium, Reciever/Destination

II. a. இருவழிப் போக்கு

b. ஒற்றைவழிப் போக்கு

c. அரைஇருவழிப் போக்கு

III. A. வழிப்படுத்திய ஊடகம், வழிப்படுத்தப்படாத ஊடகம்

B. ஒளியயல் நார்கள்

Iv. இலக்கமுறை சைகைகளை ஒத்திசை சைகைகளாகவும் ஒத்திசை சைகைகளை இலக்கமுறை சைகைகளாகவும் மாற்ற உதவும்

03. I. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்கவும்

II. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்கவும

III. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்கவும

IV. கதி, பாதுகாப்பு,ஒரு முகப்படுத்திய மென்பொரள் கட்டப்பாடு

V. வழிப்படுத்திய ஊடகம்- முறுக்கிய கம்பி,ஓரச்சுவடம்,ஒளியயல் நார்

வுழிப்படுத்தப்படாத ஊடகம் - வானொலி,நுண்ணலை,wi fi, Bluetooth

04. A.

I. Google Docs, libre Offfice Writer

II. File – Print – select printer Name – ok

III. Google Docs

B.

I. விஞ்ஞான வலது கோடு RightClick – insert- insert column to the left

II. select – Right click-delete column

III. select – Right click – insert row above

05. I. 04

II. A- 0011

b- 0101

C- 1001

III. i. Firewall

II. வலையமைப்பு பாதுகாப்பு

III. கணனி வலையமைப்பிற்கிடையே தரவு தகவல் பரிமாறும் போது உண்டாகும் நெரிசலை கட்டுப்படுத்துகிறது

06. i. left Alignment,Center Alignment,justify

II. italic,Bold, Underline

III. Replace

Iv. mail merge

V. spelling grammar

07. I. ஆம் பொருத்தமான காரணத்திற்கு புள்ளிகள் வழங்கவும்

II. face book,twitter,whats app,you tube

III. பணக்கொடுப்பணவு சேவை,வியாபார முதலீடு,வரத்தக அமையத் தகவல்கள்

අපොස සා/පෙළ පසුගිය විභාග ප්‍රශ්නෝත්තර පත්‍රිකා සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට

www.lol.lk
Learn Ordinary Level

LOL.lk online Book Store

අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371



# LOL.lk
online Book Store

071 777 4440/0756999990/071 8540371

## පළාත් ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්













## ආදර්ශ ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්

















## කෙටි සටහන් පොත්




මිටිටම් සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට

**www.lol.lk**

**Learn Ordinary Level**

අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371

PAST PAPERS WIKI

ප්‍රශ්නපත්‍ර පොත්
ගෙදරටම ගෙන්ව ගන්න
ඔන්ලයින් ඔඩර් කරන්න
WWW.LOL.LK
වෙත යන්න

BUY NOW

Secure Payments By PayPal
NO PAYPAL ACCOUNT NEEDED!

ONLINE
BOOK STORE

An evening of fun for young readers